**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.194/2023**

**தேதி : 17.09.2025**

**(வா.சா.2) – திரு . அசோக்குமார்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் வாதி சொல்லித்தான் எனக்கு தெரியுமா என்றால் ஆம். என்னுடைய நிரூபண வாக்குமூலம் வாதி வழக்கறிஞரின் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாதி என்னுடைய உறவினர் அல்ல. வாதி கவுன்சிலராக இருந்தபோது அவரை எனக்கு பழக்கம். வாதியிடம் பிரதிவாதி கடன் வாங்கி சுமார் 6 வருடம் இருக்குமா என்றால் கடன் வாங்கியது 2021 ம் வருடம்.

2. கடனுறுதிச் சீட்டு யார் முன்னிலையில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பிரதிவாதி கடனுறுதிச் சீட்டை வாங்கி வந்தார், வாதியின் வீட்டில் வைத்து கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டது. நானும், வாதியும் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியை தாவா கடனுறுதிச் சீட்டு எழுதுவதற்கு முன்பாக பார்த்துள்ளேனா என்றால் அவர் ஆட்டோ ஓட்டி வருகிறார், அவர்தான் என்னை வாதியின் வீட்டிற்கு அழைத்துச்சென்றார். பிரதிவாதிக்கும் எனக்கும் என்ன உறவு என்றால் அவரது ஆட்டோவில் வாடகைக்குச் செல்லும் வகையில் எனக்கு பழக்கம்.

3. கடனுறுதிச் சீட்டை வாதியின் வீட்டில் வைத்து கடன் கொடுக்கப்பட்டபோது நான்தான் எழுதினேன். சாட்சியாகவும் கையொப்பம் செய்துள்ளேன். வாதி முன்பு கவுன்சிலராக இருந்தார். நானும் வாதியும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சியாகத்தான் இவ்வழக்கில் முன்னிலையாகியுள்ளேன்.

பிரதிவாதி கடனுறுதிச் சீட்டில் இரண்டு கையொப்பங்கள் செய்தார். வாதியும் நானும் கூட்டாக பைனான்ஸ் தொழில் செய்து வருவதாகவும், பிரதிவாதியிடம் பணம் பறிக்கவேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :–** இல்லை.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.09.17 19:45:05 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.